சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.12/2023

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர்.திரு.ஞானப்பிரகாசம் — நாள் 09.03.2026
த/பெ. கோவிந்தசாமி

வயது. — வட்டம்

கிராமம். — மாவட்டம்.

<u>வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் வழக்கில் 3ம் தரப்பினர் மற்றும் வாதி தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வாதி எனக்கு சம்மந்தி என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதியின் சகோதரியை நான் திருமணம் செய்து கொண்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கும், எனக்கும் சொத்து சம்பந்தமாக கடந்த 15 வருடங்களாக பிரச்சனை என்று சொன்னால், கடந்த 5 வருடங்களாக தான் பிரச்சனை. பிரதிவாதிகளுக்கு எதிராக பட்டா மாற்றம் செய்வதற்கு மனு அளித்துள்ளேன் என்றால் தற்போது எதுவும் அளிக்கவில்லை. என் மனைவிக்கும், பிரதிவாதிக்கும்

சொத்து தரவில்லை என்று பிரச்சனை என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 'அ' அட்டவணை சொத்து வாதி பெயரில் உள்ளது.

2) நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். கிராம நிர்வாக அலுவலர் எந்த ஊரில் பணிபுரிகிறோரா, அவ்வூரில் தங்கி பணிபுரிய வேண்டும் என்றால் சரிதான். அதனால் நான் அ அட்டவணை சொத்திற்கு எவ்வாறு வழி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. அ அட்டவணைக்கு மேற்கு பக்கம் சிவ குமார், வடக்கு பக்கம் தெய்வானை அம்மாள், கிழக்கு பக்கத்தின் ஒரு பகுதி தெய்வானை அம்மாள் மற்றும் தெற்கு பக்கம் ராஜாமணி மற்றும் சம்பந்தம் ஆகியோர் நிலங்கள் உள்ளன. அ அட்டவணை சொத்தில் வேலி ஏதும் இல்லை. ஆ அட்டவணை சுற்றியும் வேலி ஏதும் இல்லை. வாதிக்கு கிழக்கு மற்றும் தெற்கு திசையில் ஒரு பகுதியில் வழி உள்ளது என்றால் பிரதிவாதிகள் தடுப்பது போல் அத்திசையில் உள்ள நபர்கள் தடுத்தால் போக இயலாது. அ அட்டவணை சொத்திலிருந்து எந்தெந்த புல எண்களில் வழி செல்கிறது என்று என்னால் சொல்ல இயலாது. வாதிகள் எக்காலத்திலும் பிரதிவாதிகள் நிலம் வழியாக சென்றதில்லை என்றால் சரியல்ல.

3) பிரதிவாதிகள் ஆ அட்டவணை சொத்தில் நெல், வாழை மற்றும் நிலக்கடலை பயிர் செய்து வருகிறார்கள் என்றாலும், அதனால் அவ்வழியே செல்ல இயலாது என்று சொன்னாலும், பயிர் செய்யும் போது யாரும் அவ்வழியில் செல்ல மாட்டார்கள். அ அட்டவணை சொத்தில் கடந்த 4 வருடங்களாக செம்மரம் வைக்கப்பட்டுள்ளது என்றால், தேக்கு மரமும் வைக்கப்பட்டுள்ளது. அதனால் அடிக்கடி அங்கு செல்ல மாட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனை உள்ளதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**